## சுருக்கம்

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – மாற்றுத்திறனாளிகளுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டம் – மாற்றுத்திறனாளிகள் சிறு மற்றும் குறுந்தொழில் சுயவேலைவாய்ப்பு வங்கி கடன் திட்டத்தின் கீழ் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் கடன் பெற்று சுயதொழில் துவங்கிட ஊக்குவித்திட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் விளிம்பு தொகை வழங்கும் திட்டம் – மனவளர்ச்சி குன்றியோர் (MR), புற உலக சிந்தனை அற்றவர்கள் (Autism) மற்றும் தசைசிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் (MD) போன்ற மாற்றுத் திறனாளிகளின் பெற்றோர்களுக்கும் நீட்டித்து வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

## மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை

அரசாணை (நிலை) எண்.14

நாள்: 17.06.2022,
சுபகிருது, ஆனி 3,
திருவள்ளுவர் ஆண்டு, 2053.

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.17, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-2)த் துறை, நாள் 07.06.2018.
2. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண்.3396/பணியமர்த்தல்/2022, நாள் 22.04.2022.

******

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சிறு மற்றும் குறுந்தொழில் சுயவேலைவாய்ப்பு வங்கிக் கடன் திட்டத்தின் கீழ் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் மாற்றுத்திறனாளிகள் பெறும் கடனில், மூன்றில் ஒரு பங்கு அல்லது அதிகபட்சமாக ரூ.25,000/- வரை விளிம்புத்தொகை வழங்கவும், இத்திட்டத்தின் கீழ் 2000 பயனாளிகள் பயன்பெறும் வகையில், 2018-2019 ஆம் நிதியாண்டிற்கு ரூ.5.00 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. 2022-2023 ஆம் நிதியாண்டிற்கான மானிய கோரிக்கையின் போது சட்டமன்றப் பேரவையில் 21.04.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னபிறவற்றுடன் கீழ்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:-

> "மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் சுயதொழில் கடனுதவி திட்டத்தின் மூலம் அளிக்கப்படும் ரூ.25,000/- தொகையினை அறிவுசார் குறைபாடுடையோர், புற உலக சிந்தனையற்றோர், தசைசிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் பெற்றோர்களுக்கும் நீட்டித்து 400 பயனாளிகளுக்கு வழங்கும் வகையில் ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்".

3. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் கடிதத்தில், மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி, செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி பயனாளிகளுடன் மிதமான மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளி மற்றும் 75% மேல் மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளி குழந்தைகளின் தாய்மார்களுக்கும் வழங்கப்படுவதைப் போல சிறு மற்றும் குறுந்தொழில் சுயவேலைவாய்ப்பு வங்கி கடன் மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் மனவளர்ச்சி குன்றியோர் (MR), புற உலக சிந்தனை அற்றவர்கள் (Autism), தசைசிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் (MD) போன்ற மாற்றுத் திறனாளிகளின் பெற்றோர்களுக்கும் வங்கிக்கடன் பெற விளிம்புதொகை வழங்கும் திட்டத்தினை நீட்டிப்பு செய்யலாம் என்றும் மேற்படி சிறு மற்றும் குறுந்தொழில் சுயவேலைவாய்ப்பு வங்கிகடன் மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் மனவளர்ச்சி குன்றியோர் (MR), புற உலக சிந்தனை அற்றவர்கள் (Autism) மற்றும் தசைசிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் (MD) போன்ற மாற்றுத் திறனாளிகளின் பெற்றோர்களுக்கும் நீட்டித்து வழங்கும்பட்சத்தில், கூடுதலாக நிதி ஒதுக்கீடு ஏதும் தேவைப்படாது என்பதால், 2022-2023 ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.5.00 கோடிக்குள் இச்செலவினம் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

4. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் மேலும் தனது கடிதத்தில் மேற்காணும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்திட ஏதுவாக 18 வயதிற்கு மேற்பட்ட புற உலக சிந்தனை அற்றவர்கள் (Autism) மற்றும் தசைசிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட (MD) மாற்றுத்திறனாளி குழந்தைகளின் பெற்றோர்கள் மற்றும் 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளி குழந்தைகளின் பெற்றோர்களுக்கு மட்டும் இத்திட்டத்தினை செயல்படுத்திடலாம் எனவே, சிறு மற்றும் குறுந்தொழில் சுயவேலைவாய்ப்பு வங்கிகடன் மான்யம் வழங்கும் திட்டத்தின் கீழ் மனவளர்ச்சி குன்றியோர் (MR), புற உலக சிந்தனை அற்றவர்கள் (Autism) மற்றும் தசைசிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் (MD) போன்ற மாற்றுத் திறனாளிகளின் பெற்றோர்களுக்கு வங்கிக்கடன் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலினை செய்த அரசு அதனை ஏற்று, மாற்றுத்திறனாளிகளுக்கு சிறு மற்றும் குறுந்தொழில் சுயவேலைவாய்ப்பு வங்கிகடன் திட்டத்தின் கீழ் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் மாற்றுத்திறனாளிகள் பெற்று சுயதொழில் தொடங்குவதை ஊக்குவிக்கும் வகையில் பயனாளிகள் செலுத்த வேண்டிய விளிம்பு தொகையினை மானியமாக வழங்கும் திட்டத்தினை 18 வயதிற்கு மேற்பட்ட புற உலக சிந்தனை அற்றவர்கள் (Autism), தசைசிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட (MD மாற்றுத்திறனாளி குழந்தைகளின் பெற்றோர்கள் மற்றும் 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளி குழந்தைகளின் பெற்றோர் ஆகியோருக்கு இத்திட்டத்தினை நீட்டித்தும், கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இத்திட்டத்தினை செயல்படுத்திடவும் அரசு ஆணையிடுகிறது:-

i) 2022-2023 ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.5.00 கோடிக்குள் புதிய பயனாளிக்கான கூடுதல் செலவினத்தை மேற்கொள்ள வேண்டும்.

ii) பயனாளிகளின் கடன் தொகையில் 20 விழுக்காடு (அல்லது) அதிகபட்சமாக ரூ.15,000/- வரை பயன் பெறலாம்.

iii) தற்போது இத்திட்டத்தில் நீட்டிப்பு வழங்கப்பட்டு கூடுதலாக சேர்க்கப்படும் மேற்படி பயனாளிகளின் எண்ணிக்கை 400-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. ஆனந்தகுமார்,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் ம.வ.மே.) அலுவலகம், சென்னை-9.
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
சம்பளக் கணக்கு அலுவலகம், சென்னை-9/35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை-18.
அனைத்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்.
(மாற்றுத்திறனாளிகள்நல இயக்குநர் வழியாக)

<u>நகல்:-</u>
நிதி (சந)த் துறை, சென்னை-9.
அரசு செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர்,
மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்